## ஆண்டவருடைய திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு

*இரண்டாவது திருவழிபாடு ஆண்டு*

2024-03-24

(*இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்* 50: 4-7 ,

*திபா* 22:7-8, 16-17, 18-19, 22-23 ,

*திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 2: 6-11 ,

*மத்தேயு எழுதியபடி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள்* 26:14 - 27:66 )

***திருப்பலி முன்னுரை***

*வாருங்கள் நாமும் எருசலேமிற்கு செல்வோம்!*

*அன்பிற்குரியவர்களே! தவக்காலத்தின் இறுதி வாரமாகிய புனித வாரத்தின் தொடக்க நாள் - குருத்து ஞாயிறு திருவழிபாட்டு கொண்டாட்ட நிகழ்வுகளுக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன். 'ஓசன்னா' என்று ஓலமிடும் இதே கூட்டம் 'சிலுவையில் அறையும்' என்று கூக்குரலிடும் என்று தெரிந்தும், கழுதையின் மேல் கம்பீரமாக ஏறி எருசலேம் நோக்கி தன் பவனியை தொடர்கிறார் இயேசு. இயேசுவின் குருத்தோலை பவனி, தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற தயாராக இருக்கும் அவரின் வெற்றிப் பவனி. இந்த பவனியில் அன்று வியாபாரச் சந்தையாக கிடந்த எருசலேம் ஆலயத்தை தூய்மையாக்கி அழகுபடுத்தியவர், இன்று அதே எருசலேம் ஆலயத்திற்குள் அரசராக அடி எடுத்து வைக்கிறார். இன்று நாம் கொண்டாடும் குருத்து ஞாயிறு இயேசுவின் உயிர்ப்பு ஞாயிறு கொண்டாட்டத்திற்கான தயாரிப்பு என்பதை உணர்வோம். பசுமை நிறத்துடன்*

*செழுமையாக காட்சியளிக்கும் குருத்தோலை , நம் துன்பத்திலிருந்து நம்மை துளிர்விட்டு எழச்செய்யும் நம்பிக்கை ஓலை ஆகட்டும்.*

*வாருங்கள்! குருத்தோலை ஏந்தியவர்களாக இயேசுவின் வெற்றி பவனியில் பங்கெடுத்து எருசலேம் ஆலயத்துக்குள் செல்வோம், இயேசுவின் வெற்றிப்பவனி* 40 *நாட்களாக நாம் மேற்கொண்ட எல்லா தவ முயற்சிகளிலும் வெற்றியை தரட்டும்! புனித வாரம் நம்மை இயேசுவின் பாடுகள் வழியாக புனிதப்படுத்தட்டும்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*எங்கள் அரசனாம் இறைவா!*

*உம் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் உம் ஊழியர்களை ஆசீர்வதித்து உம்மை மக்களுக்குப் பறைசாற்ற வேண்டிய அருளையும், ஆற்றலையும் அவர்களுக்குக் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*பாவம் போக்கும் இறைவா!*

*வரவிருக்கும் புனித நாட்களில் எங்கள் பாவங்களையும், பலவீனங்களையும் அறிக்கையிட்டு புதுவாழ்வு வாழ வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*மனமாற்றமருளும் இறைவா!*

*தவ முயற்சிகளால் நாங்கள் உள்ளத்தளவில் மனமாற்றமடைந்து தவத்தின் மேன்மையை, உமது உடனிருப்பைப் பிறருக்கு பறைசாற்றும் மக்களாக எம்மை மாற்ற வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்புத் தந்தையே இறைவா!*

*நான்தான் பெரியவன், தலைவன். என்னை நீங்கள் எல்லோரும் வணங்கி நிற்கவேண்டும், மரியாதை செய்ய வேண்டும்.. என்றெல்லாம் நம்மில் எத்தனை பேர் இறுமாப்புடன் பேசுகிறோம்? நடந்துக்கொள்கிறோம்? நமக்கு உண்மையிலேயே அருகதை இருக்கிறதா என்று ஒருகணம் சிந்தித்துப் பார்த்து எங்கள் வாழ்வில் மனமாற்றம் உண்டாக வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*அன்பின் இறைவா!*

*பொருளாதார வளர்ச்சியின்றி சிக்கி வறுமையில் வாடும் ஏழைகள், வேலையில்லாமல் அல்லல்படும் மக்கள் போன்றோரைக் கண்ணோக்கிப் பாரும். வாழ்வை இழந்து தவிக்கும் மக்களின் மேல் உமது அன்பைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*இரக்கம் காட்டுபவரே இறைவா,*

*எம்மை குணப்படுத்துவதற்காக காயப்பட்ட இயேசுவின் பாடுகள் வழியாக, எங்கள் உடல், உள்ள, ஆன்ம நோய்களை குணப்படுத்தி புது வாழ்வருள வேண்டுமென்றும், சிலுவையில் தம்மையே பலியாக்கிய கிறிஸ்து இயேசுவில் உமது திட்டத்தின் நினைவினைக் கண்டுணர, உலக மக்கள் அனைவருக்கும் ஞானமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*கருணையின் வடிவே இறைவா!*

*உம் திருமகன் கற்பித்த அன்பு, மன்னிப்பு, இரக்கம் இவற்றின் வழியாக எழை, எளிய மக்களுக்கு உதவி செய்து வாழும் நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள் - 2

1. *புனித வாரத்தில் புதிய திட்டங்களுடன், புது முயற்சிகளுடன் புனிதத்தை நோக்கி பயணித்து, தன்னால், தான் வாழும் சமூகத்தை புனிதப்படுத்த எம் குருக்கள், துறவியர் அனைவரையும் ஆசீர்வதிக்க இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

2. *என் இறைவா! என் இறைவா! ஏன் என்னை கைவிட்டீர்? என்று அன்றாடச் சிலுவைகளின் மத்தியில் நம்பிக்கையிழந்து வாழும் எம் துன்புறும் சகோதர சகோதரிகள், ஆண்டவராகிய உம் தயவினைப் பெற இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

3. *புனித வாரத்தில் அடியெடுத்து வைத்துள்ள எல்லா கிறிஸ்தவர்களும், புனித வாழ்விற்கான அழைத்தலை உணர்ந்து பாவத்திற்கான பரிகாரம் செய்து, தகுந்த தயாரிப்புடன் பாவசங்கீர்த்தனம் செய்து, அர்த்தமுள்ள உயிர்ப்பு ஞாயிறு விழாவினை கொண்டாட உமதருள் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

4. *இன்றைய குருத்தோலை பவனியில் பங்கெடுத்து, குருத்து ஞாயிறு திருவழிபாட்டின் வழியாக ஆசிரைப் பெற இங்கே கூடியிருக்கும் எங்களையும், எங்கள் பங்கு சமூகத்தையும், இயேசுவின் கீழ்படிதல், தாழ்ச்சி என்ற உயரிய நற்குணங்களால் நிரப்பி, கிறிஸ்துவின் மனநிலையில் அர்த்தமுள்ள கிறிஸ்தவ வாழ்வு வாழச் செய்ய இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*